# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.39/2021**

| Deposition of Name | சுகுணா Inspector | Prosecution | LW-15 as PW-7 |
|---|---|---|---|
| Father Name | க/பெ.வஜ்ரபாபு | Defence | |
| Station | திருவெண்காடு PS | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 48/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**12.01.2026 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 02.06.2019 ம் தேதி திருவெண்காடு காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் என்பவர் சதாசிவம் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண். 69/2019 ச.பி 279, 337 இதச வாக வழக்கு பதிவு செய்து அதன் விசாரணையை அன்றைய தினம் காவல் ஆய்வாளராக இருந்து சுப்பிரியா என்பவரிடம் விசாரணைக்கு வைத்தார். சுப்பிரியா என்னுடன் சக ஆய்வாளராக பணிபுரிந்ததால் அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். அவர் பணி மாறுதல் காரணமாக சென்றதால் தற்போது திருவெண்காடு காவல் ஆய்வாளராகிய நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. இவ்வழக்கை முதல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான கலியமூர்த்தி, செந்தில் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்ததையும், மற்ற சாட்சிகளை விசாரணை செய்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் சிவகுரு மற்றும் உதவி ஆய்வாளர் மதி ஆகியோரிடம் சொன்ன வாக்குமூலத்தையே ஆய்வாளரிடமும் சொன்னதால்

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.01.12 17:10:13 +0530

மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. 07.07.2019 ம் தேதி காலை 9.40 மணிக்கு இவ்வழக்கில் காயம் பட்ட சதாசிவம் என்பவர் சென்னை ராஜீவ் காந்தி அரசுமருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததை அடுத்து இவ்வழக்கின் சட்ட பிரிவினை அன்றைய தினமே 10.00 மணிக்கு 279, 337 இதசவிலிருந்து 304 (A) இதசவாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ,.7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

3. 07.07.2029 ம் தேதி வழக்கில் பிரேத விசாரணை மேற்கொண்டு சாட்சிகளான கண்ணன்,ராஜேந்திரன், ராஜ்குமார், செல்வராஜ், தங்க கணேசன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் பஞ்சாயத்தார்களான கண்ணன், ராஜேந்திரன், ராஜீ, செல்வராஜ், கணேசன், ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு 08.07.2019 ம் தேதி காலை 8.00 மணிக்கு மதி என்ற உதவி ஆய்வாளர் மூலம் அனுப்பி வைத்துள்ளார், **ஆய்வாளர் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4. பட்டியல் சாட்சிகள் 6 முதல் 9 வரையிலான சாட்சிகளை தனித்தனியா விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை வாகன தணிக்கை ஆய்வாளரிடம் அனுப்பி ராம்குமார் ஆய்வாளர் கொடுத்த சான்றிதழை பெற்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த விபத்தில் சம்பந்தப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அசாஆ. 9 மற்றும் அசாஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறந்து போன சதாசிவம் என்பருக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் நரேந்திரன் என்பவரிடம் சான்று பெற்று விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மதி உதவி ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

KAILAASH R Digitally signed by KAILAASH R
Date: 2026.01.12 17:10:22 +0530

இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 11.07.2019 ம் தேதி ச.பி 304 (A) இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கோப்புகளின் அடிப்படையில் தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் 31.05.2019 தேதியன்று ராஜேந்திரன் என்பவர் போன் மூலம் அசா.1 க்கு தகவல் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் 02.06.2019 அன்று தான் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்து புகார் வாக்கமூலம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.06.2019 ம் தேதி சென்னை ராஜீவ் காந்தி மருத்துவ மனையில் மேல் சிகிச்சைக்காக காயம் பட்ட நபர் சேர்ந்தார் என்றால் சரிதான். மேற்படி நபர் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் காயம் பட்ட நபர் தொடர் சிசிச்சையில் பல்வேறு மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டு இறந்து விட்டார். ஆனால் நாங்கள் மேற்படி சிகிச்சை எடுத்துக்கொண்டு ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் லதா பூம்புகார் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக சொல்லப்படும் நிலையில் அதற்கு சான்றாக எந்த ஆவங்களும்தாக்கல் செய்யப்பட வில்லை என்றால் சரிதான். 1 முதல் 14 சாட்சிகளை விசாரித்தவர்கள் என்னோடு பணிபுரிந்த நபர்கள் என்றால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் குறிப்பிட்ட 3 நபர்கள் மட்டும் தான் என்னுடன் பணிபுரிந்தவர்கள். 02.06.2019 ந்தேதி அன்று விபத்து நடந்த பிறகு விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை நாங்கள் கைப்பற்றினோமா என்றால் அன்றே கைப்பற்றிவிட்டோம். எப்போது அந்த வாகனம் தணிக்கைக்கு அனுப்பப்பட்டது என்றால் வழக்கு கோப்பில் என்றைய தினம் வாகனம் ஒப்படைக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் போலிசார் வாகனத்தை 12.06.2019 அன்று ஒப்படைத்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் பொதுவாக மோட்டார் வாகன ஆய்வாளர் தான் என்றைய தேதியில்

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.01.12 17:10:33 +0530

வாகனத்தை சோதனை இடுகிறாரோ அதே தேதியை தான் குறிப்பிட்டு கொடுப்பார்கள் அதனால் அதில் அவ்வாறு காணப்படுகிறது. எதிரி பயன்படுத்திய அசோக்லைலான்டு லாரி 07.06.2019 அன்றே சோதனை செய்யப்பட்டுள்ளது. பொதுவாக தணிக்கை அதிகாரிக்கு காவல் துறை சார்பாக விபத்து பற்றி தகவல் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் சம்பவ இடத்திற்கே வந்து கணரக வாகனத்தை ஆய்வு செய்திருப்பார்கள் என்றாலும் இதில் அவ்வாறு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்படும் ராஜேந்திரன் என்பவர் சம்பவ இடத்திற்கு எதற்காக வந்தார் என்று நாங்கள் விசாரணையில் குறிப்பிட வில்லை என்றால் சரியல்ல. அவரே அவருடைய வாக்குமூலத்தில் 31.05.2019 ம் தேதி தான் திருவெண்காடு கடைத்தெருவிற்கு போன போது விபத்து நடந்ததாக சொல்லியுள்ளார். மேற்படி ராஜேந்திரன் சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என சாட்சியமளித்துள்ளார் என்றாலும் இதிலிருந்தே போலிசார் புகார்தாரருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளித்திருப்பது தெரியவருகிறது என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.01.12 17:11:56 +0530